# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

**<u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>**

2012ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**பொருள்கள்**

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 29.06.12 | 1. | இம்மாநகராட்சியில் உள்ள கணினிகள் – 44 எண்ணம், Server – 2 எண்ணம், Dot Matrix Printer – 5 எண்ணம், 24 Port Switch – 16 எண்ணம், 8 Port Switch – 1 எண்ணம் மற்றும் Laptop – 2 எண்ணம் ஆகியவற்றின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Annual maintenance Contract) முடிவடைந்து விட்டதால் 2012–2013ம் ஆண்டுக்கு மேற்படி சாமான்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டி உள்ளது.<br><br>மேற்படி சாமான்களை மெசர்ஸ் HCL Infosystems Ltd. நிறுவனத்தினர் தான் முன்பு இம்மாநகராட்சிக்கு விநியோகம் செய்துள்ளனர். எனவே மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளியில், மேற்படி நிறுவனத்தார் மேலே குறிப்பிட்டுள்ள சாமான்களை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.336187.68பை. என்றும் இதில் 5% தள்ளுபடி தொகை ரூ.16809.39 பைசா போக இறுதியாக வரும் மொத்த செலவுத் தொகை ரூ.319378.29பைசா என்றும் குறிப்பிட்டுள்ளனர்.<br><br>எனவே மேற்படி சாமான்களை மெசர்ஸ் HCL Infosystems Limited நிறுவனத்தினர் முன்பே இம்மாநகராட்சிக்கு விநியோகம் செய்துள்ளதால் மேற்படி நிறுவனத்தினர் மூலம் மேற்படி சாமான்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்வதற்கும், மேற்படி நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொண்டு மேற்படி நிறுவனத்தினருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், மேற்படி வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.319378.29பைசாவை மேற்படி மெசர்ஸ் HCL Infosystems Ltd. நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>இ5/8445/2012 | 130) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சிக்கு சொந்தமான டி.என். 69 5719 கழிவுநீர் லாரி 10.09.91ல் வாங்கப்பட்டது. இதுவரை என்ஜின் வேலை எதுவும் பார்க்கப்படவில்லை. தற்போது தகுதி சான்றிதழ் பெறுவதற்கு என்ஜின் பணி மற்றும் டிங்கர் வேலையினை பார்ப்பதற்கு செலவு ரூ.60000/– மாமன்றத்தின் அனுமதி வேண்டி அரசு அறிவித்த தொகை ரூ.32400/–க்கு மேல் கூடுதல் செலவினத் தொகை ரூ.27600/– செய்ய | 131) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டியுள்ளது. தற்போது அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி செய்த பின் தான் தகுதிச் சான்றிதழ் பெறவும் கூடுதல் செலவினம் செய்ததற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>இ6/08441/12 | |
| | 3. | இம்மாநகராட்சியில் உள்ள Lipi T6215 Line Printer–க்கு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (Annual Maintenance Contract) முடிவடைந்து விட்டதால் 2012–2013ம் ஆண்டுக்கு மேற்படி Line Printer–க்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டி உள்ளது.<br><br>மேற்படி Line Printer–ஐ மெசர்ஸ் Lipi Data systems Ltd. நிறுவனத்தினர் தான் முன்பு இம்மாநகராட்சிக்கு விநியோகம் செய்துள்ளனர். எனவே மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளியில் மேற்படி நிறுவனத்தினர் மேற்படி Line Printer–ஐ வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு ஆகும் மொத்த செலவுத் தொகை ரூ.69663/– என்று குறிப்பிட்டுள்ளனர்.<br><br>எனவே மேற்படி நிறுவனத்தினர் மூலம் மேற்படி LIne Printer–க்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்வதற்கும், மேற்படி நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொண்டு மேற்படி நிறுவனத்தினருக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கும், மேற்படி விலைப்புள்ளி தொகை ரூ.69663/–ஐ மேற்படி மெசர்ஸ் Lipi Data Systems Ltd. நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/8445/12 | 132) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4. | இம்மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் நீர்வரத்து குறைவாக இருப்பதால், சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள வல்லநாடு தெப்பம் பகுதியிலுள்ள ஆழ்துளை கிணற்றில் புதிதாக மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் மேற்கொள்ள மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.95,846/– செலவு செய்ததை, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>மதிப்பீடு எண் 52/12–13 | 133) பதிவு செய்யப்பட்டது. |
| | 5. | பகுதி–2 திட்டத்தின் கீழ் 2012–13ம் ஆண்டுக்கு தூத்துக்குடி மாநகராட்சிக்கு மண்டல அலுவலகங்கள் கட்டுவதற்காக அரசாணை எண் 162 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.06.2012ல் ரூ.100 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு போதிய அலுவலக கட்டிடம் ஏற்படுத்தும் பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு மண்டல அலுவலகங்களை மாநகராட்சியின் பழைய அலுவலக கட்டிடத்தில் அமைக்கலாம். எனவே தெற்கு மண்டலம் மற்றும் வடக்கு மண்டலங்களுக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட வேண்டிய நிலையில் உள்ளது.<br><br>எனவே தெற்கு மண்டல அலுவலகத்தினை முத்தையாபுரம் ஜெ.எஸ். நகரில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலும், வடக்கு மண்டல அலுவலகத்தினை முத்தம்மாள் காலனியில் சங்கரப்பேரி கிராம பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் உள்ள இடத்தில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலும் மொத்தம் ரூ.120 லட்சம் மதிப்பீட்டில் கட்டவும், அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 100 லட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.20 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/14361/2011 | 134) தெற்கு மண்டல அலுவலகத்தினை முத்தையாபுரம் ஜெ.எஸ்.நகரிலும், வடக்கு மண்டல அலுவலகத்தினை பொருளில் குறிப்பிட்டுள்ள முத்தம்மாள் காலனி சங்கரப்பேரி கிராமப் பஞ்சாயத்து அலுவலக கட்டிடம் உள்ள இடத்திற்கு மாற்றாக மீளவிட்டான் ஏ.ஆளு நகரில் உள்ள மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் கட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 6. இம்மாநகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டுவதற்காக விரிவான மதிப்பீட்டு குறிப்பு திட்ட அறிக்கை தயாரிக்க மற்றும் கன்சல்டென்ஸி அமைப்பதற்கு 16.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட்டது. இதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி ஒப்புநோக்குப் பட்டியல் 12.06.2012 அன்று தயாரிக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியுள்ளதாக இருந்ததால் 15.06.2012 அன்று விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டது.<br><br>1) CRISIL RISK & Infrastructure solution limited - Rs. 2294391/-<br>Ishwar Nagar Plot No. 1 and 2 New Delhi – 110065<br><br>2) Darashaw Company Pvt. Ltd.<br>8/2, Unique sterling Apartments 3rd Cross Street, - Rs. 2738887/-<br>Sterling Road, Nungambakkam, Chennai 600 034.<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி மிக குறைவாக கொடுத்துள்ள Crisil risk Infrastructure Solution Limited, New Delhi, (ரூ.2294391/–) நிறுவனத்திடம் விலைப்புள்ளி கேட்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் ரூ.2282155/–க்கு செய்ய சம்மதித்து கொடுத்ததை மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/15014/2011 | 135) தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் உருவாக்குவதில் உள்ள பிரச்சனைகளை பற்றிய உண்மை நிலையை அரசுக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. |
| | 7. மதிப்பீடு ரூ.18.00 இலட்சம்<br>இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சண்முகபுரம் பள்ளி வளாகத்தில் முதல் மாடியில் குளிர் சாதன வசதி உள்ள நூலகம் கணனி, நூல்கள் மற்றும் இருக்கைகள் அமைக்கும் பணிக்கு கல்வி நிதியில் 30.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1. திரு. ஜே.சுரேஸ் ஜெயக்குமார், ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 4.87 % அதிகம் ரூ.1544020/–<br>2. திரு. பி.கோமதி ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 7.27% அதிகம் ரூ. 1579936/–<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜே.சுரேஸ் ஜெயக்குமார் (மதிப்பீட்டை விட 4.87% அதிகம்) அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.77% அதிகம் கொடுத்துள்ளார். மேலும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டால் தற்போது உள்ள விலை விகிதப்பட்டியல்படி (2012–13 ஆண்டு) திருத்திய மதிப்பீடு தயார் செய்தால், ஒப்பந்தகாரர் கொடுத்துள்ள விலைவிகிதத்தை விட அதிகமாக இருப்பதாலும் ஒப்பந்தகாரர் திரு.ஜே.சுரேஸ் ஜெயக்குமார் கொடுத்துள்ள விலைக்குறைப்பு கொடுத்தை (மதிப்பீட்டை விட 4.77 சதவீதம்) மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண். 12/11–12 | 136) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 8. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள வார்டு பொது மக்களின் நலனுக்காக, பொது மக்கள் விருப்பத்தின் பேரில் அவர்கள் இல்ல திருமணம், பூப்புனித நீராட்டு விழா, புதுமனைபுகு விழா,போன்ற இதர விசேசங்களுக்கு மாநகராட்சியில் பணம் செலுத்தியதன் பேரில் இம்மாநகராட்சியில் இரண்டு டாடா மினி டேங்கர் 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி மூலம் ராஜாஜி பூங்கா நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் நிரப்பப்பட்டு மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.<br><br>தற்போது குடிநீர் விநியோகத்தால் ஏற்படும் மின்சார செலவினம் மற்றும் மின்தடை காலத்தில் மோட்டார் இயக்குவதற்கு தேவையான டீசல் ஆகியவற்றால் ஏற்படும் செலவினங்களால் குடிநீர் கட்டணம் மூலம் பெறப்படும் வருமானத்தை காட்டிலும், குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்காக செய்யப்படும் செலவினம் கூடுதலாக இருந்து வருகிறது | 137) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>மேலும் தற்போது மாநகராட்சியுடன் இணைந்துள்ள 5பஞ்சாயத்து பகுதிகளிலும் மேற்கண்ட மினி டேங்கர் லாரிகள் மூலம் மேற்படி பகுதி இல்ல விசேஷங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது அத்தியாவசியமாகிறது.<br><br>எனவே தற்போது அனைத்து விசேஷங்கள் மற்றும் இதர உபயோகத்திற்கு டாடா மினி டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய (1000லிட்டர்க்கு) ரூ200.00 கட்டணம் வசூல் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு –<br>தற்போதைய மின் கட்டணம் மற்றும் எரிபொருள் விலையேற்றம் கருத்திற்கொண்டும், மாநகராட்சி பகுதி பொது மக்கள் நலன் கருதி அவர்களது இல்ல விசேஷங்களுக்கு அலுவலக டாடா மினி டேங்கர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய (1000லிட்டர்க்கு) நடை ஒன்றுக்கு ரூ200.00 கட்டணம் வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3 / 9375 / 2012</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>9. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குப்பை அள்ளும் பணிக்கு தேவையான Tricycle வாங்குவதற்கு 06.06.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு எண்ணம் ஒப்பந்தப்புள்ளி கிடைக்கப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>1) ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர்,<br>2) ESK என்ஜினியரிங் அன்ட் டெக்னாலஜிஸ், சென்னை<br><br>இதில் தொழிற்நுட்ப விபரங்கள் அனைத்தும் சரியாக இருந்ததால் ரவி மெட்டல் ஒர்க்ஸ், வேலூர் Price bid திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு<br><br>112 எண்ணம் Sullage Tri cycle சப்ளை செய்ய அனைத்தும் உட்பட ரூ.3640000/–. வாகனம் ஒன்றுக்கு ரூ.32500/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி நிறுவனத்தாரிடம் Negotiation கேட்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு Negotiation rate விலைவிகிதம் கொடுத்துள்ளனர். 112 எண்ணம் Tri cycle சப்ளை செய்வதற்கு ரூ.3460800/– எண்ணம் ஒன்றிற்கு ரூ.30900/– என விலைவிகிதம் கொடுத்துள்ளனர். மேற்படி விலைவிகிதத்தை அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பார்வையிட்டு, பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.<br>இ1/14912/2011</td>
<td>138) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>10. தூத்துக்குடி மாநகராட்சியில் கீழ்க்கண்ட பணியிடங்கள் புதிதாக தோற்றுவிப்பது சம்பந்தமாக அரசு ஆணை வரப்பெற்றுள்ளது.<br><br>1) உதவி ஆணையர் – 1 பணியிடம்<br>2) கணக்கு அலுவலர் – 1 பணியிடம்<br>3) கண்காணிப்பாளர் – 2 பணியிடம்<br>4) நேர்முக எழுத்தர் – 1 பணியிடம்<br>5) மாநகர பொறியாளர் (இப்பணியிடம் ஏற்கனவே உள்ள செயற்பொறியாளர் பணியிடத்திலிருந்து நிலை உயர்த்தப்பட வேண்டும் – 1 பணியிடம்<br>6) உதவி செயற்பொறியாளர் – 1 பணியிடம்<br>7) உதவி பொறியாளர் – 1 பணியிடம்<br>8) செயற்திறன்பெற்ற/ செயல்திறனற்ற உதவியாளர் (Skilled / unskilled Asst) – 9 பணியிடம்<br>9) பெண் செவிலியர் – 1 பணியிடம்<br>மொத்தம் – 18 பணியிடங்கள்<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை அரசாணை (நிலை) எண் 48 நாள் 22.05.2012 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u>: மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>சி1/21375/2008</td>
<td>139) பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>